இலங்கை திறந்த பல்கலைக்கழகம் 060

கல்விப்பீடம்

விசேட தேவைகள் சார் கல்வியில் சிறப்புக் கல்விமாணி நிகழ்ச்சித்திட்டம் - 2023/2024

மட்டம் - 05

**SNU5338/ESU3138– விசேட நிலைமைகள் மற்றும் கற்றல் தேவைகளுக்கான அறிமுகம்**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி:- 19.01.2025 நேரம்: பி.ப. 01.30 - பி.ப 04.30

பகுதி I இல் சகல வினாக்களுக்கும் பகுதி II இலிருந்து ஏதேனும் மூன்று (03) வினாக்களுக்கும் விடை எழுதுக.

## பகுதி I

1. 'இயலாமையுடைய நபர்களுக்கான கல்விச்சட்டத்தின் (IDEA) படி, 13 வகையான சிறுவர்கள் விசேட கல்வியைப் பெறத் தகுதியுடையவர்களாகக் கருதப்படுகின்றார்கள்' அவ்வகைப்பாட்டில் **ஐந்தினைக்** (05) குறிப்பிடுக.

2. ஒட்டிசத் திருசிய ஒழுங்கீன நிலையையுடைய (ASD) மாணவர்கள் தொடர்பில் ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டிய **ஐந்து** (05) குணாதிசயங்களைக் குறிப்பிடுக.

3. குறிப்பான கற்றல் இயலாமை என்ற பதத்தினை உதாரணத்தின் உதவியுடன் வரைவிலக்கணப்படுத்துக.

4. வெச்ஸ்லர் வயது வந்தோருக்கான நுண்ணறிவு அளவுகோலின் (WAIS) அடிப்படையிலான அறிவாற்றல் சார் இயலாமைகளின் **ஐந்து** (05) எல்லைகள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றையும் அவற்றிற்கான நுண்மதி ஈவுச் சோதனை மதிப்பெண்களின் எல்லைகளையும் குறிப்பிடுக.

5. பெருமூளை வாதம் (CP) ஏற்படுவதற்கான **மூன்று** (03) பொதுவான காரணங்களை முன்வைத்து, பெருமூளை வாதம் எவ்வாறு இயக்கத் திறன்களைப் பாதிக்கிறது என்பதைச் சுருக்கமாக விளக்குக.

6. சிறுவர்களின் பார்வைத்திறன் குறைபாடுகளைக் கண்டறியப் பயன்படுத்தப்படும் **மூன்று** (03) முறைகளைக் குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றைச்** (01) சுருக்கமாக விளக்குக.

7. வகுப்பறையில் விசேட கல்வித் தேவைகளையுடைய மாணவர்களுக்கு உதவுவதில் விசேட கல்வி ஆசிரியரின் **ஐந்து** (05) முக்கிய பாத்திரங்களைக் குறிப்பிட்டு, அவற்றில் **இரண்டை** (02) விளக்குக.

8. டவுன் சிண்ட்ரோம் உள்ள மாணவர்களின் **ஐந்து** (05) குணாதியசங்களைக் குறிப்பிட்டு, அவர்களின் கல்வியில் தாக்கத்தை ஏற்படுத்தும் மேற்கண்ட **இரண்டு** (02) பண்புகளைச் சுருக்கமாக விளக்குக.

**(05 x 08 = 40 புள்ளிகள்)**

## பகுதி – II

9. "கற்பித்தல் மற்றும் கற்றல் செயல்முறையைத் தொடங்குவதற்கு முன் ஒரு ஆசிரியர் கருத்திற் கொள்ளக்கூடிய ஒரு முக்கிய காரணி கவனம் ஆகும். நடத்தை ஒழுங்கீனங்கள் பெரும்பாலும் கற்றல் சூழலைப் பாதிக்கின்றன."

   **i.** அதீத செயலூக்கம் மற்றும் அவதானக் குறைபாட்டின் (ADHD) **மூன்று** (03) முக்கிய பண்புகளை விளக்குக. **(03 புள்ளிகள்)**



37

**ii.** ஒரு வகுப்பு ஆசிரியராக, அதீத செயலூக்கமும் அவதானக் குறைபாடும் உள்ள மாணவனையும், சாதாரண விருத்தி உள்ள மாணவனையும் எவ்வாறு வேறுபடுத்தலாம். **இரண்டு (02)** எடுத்துக்காட்டுக்களுடன் விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** அதீத செயலூக்கமும் அவதானக் குறைபாடும் உள்ள குழந்தைகளின் நடத்தைச் சிக்கல்களைக் குறைக்க நீங்கள் பயன்படுத்தக்கூடிய **மூன்று** (03) உத்திகளை ஆராய்க.

**(12 புள்ளிகள்)**

**10. i.** பேச்சு ஒழுங்கீனங்கள் உள்ள மாணவர்களுக்கும் மற்றும் மொழி சார் ஒழுங்கீனங்கள் உள்ள மாணவர்களுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை எடுத்துக்காட்டுகளை முன்வைத்து விளக்குக.

**(03 புள்ளிகள்)**

**ii.** மாணவர்களிடையே காணக்கூடிய **மூன்று** (03) பொதுவான பேச்சு ஒழுங்கீனங்களைக் குறிப்பிட்டு, அவற்றில் **ஒன்றை** (01) தொடர்புடைய எடுத்துக்காட்டுக்களை முன்வைத்து விவரிக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** மொழி சார்ந்து பெற்றுக்கொள்ளும் மற்றும் வெளிப்படுத்தும் மொழி ஒழுங்கீனங்களின் தலா **ஐந்து** (05) பண்பியல்புகளைக் குறிப்பிட்டு, அவற்றிற்கு வகுப்பறை உதவிகளை வழங்குவதற்காக தலா **மூன்று** (03) செயற்பாடுகளை குறிப்பிடுக.

**(12 புள்ளிகள்)**

**11. i.** மீத்திறனுடைய மற்றும் ஆற்றல் மிகு மாணவர்களிடம் பொதுவாகக் காணப்படும் நீங்கள் அவதானித்த **ஐந்து** (05) முக்கிய பண்பியல்புகளை அடையாளப்படுத்துக.

**(03 புள்ளிகள்)**

**ii.** மீத்திறனுள்ள மற்றும் ஆற்றல் மிக்க மாணவர்களின் **ஐந்து** (05) கல்விசார் தேவைகளைப் பட்டியலிட்டு, வகுப்பறையில் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான **மூன்று** (03) உத்திகளை எடுத்துக்காட்டுக்களுடன் விவரிக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறையில் மீத்திறனுள்ள மற்றும் ஆற்றல் மிக்க மாணவர்களை உள்ளடக்குவதில் ஆசிரியர்கள் எதிர்கொள்ளும் சவால்களைப் பற்றி ஆராய்ந்து, எடுத்துக்காட்டுக்களின் உதவியுடன் **மூன்று** (03) நடைமுறை தீர்வுகளை முன்மொழியவும்.

**(12 புள்ளிகள்)**

**12. i.** புலன் சார் குறைபாடு என்ற பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக.

**(03 புள்ளிகள்)**

**ii.** உள்ளடங்கல் வகுப்பறையில் புலன் சார் குறைபாடுள்ள மாணவர்கள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) சவால்களைக் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து விவரிக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறைகளில் புலன் சார் குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்குத் திறம்பட உதவுவதற்கு ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய உத்திகளை முன்மொழிக, உங்கள் பதிலை விளக்குவதற்கு நடைமுறை உதாரணங்களை முன்வைக்குக.

**(12 புள்ளிகள்)**

**13. i.** உடல்சார் குறைபாடு மற்றும் உடல்நல (ஆரோக்கிய) குறைபாடு ஆகியவற்றுக்கு இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

**(03 புள்ளிகள்)**

**ii.** உடல்சார் குறைபாடு அல்லது உடல்நலக் (ஆரோக்கிய) குறைபாடுகள் உள்ள மாணவர்கள் பாடசாலை அமைப்பில் எதிர்கொள்ளக்கூடிய **மூன்று** (03) சவால்களை ஆராய்ந்து, இந்தச் சவால்கள் அவர்களின் கல்வித் திறனை எவ்வாறு பாதிக்கும் என்பதைப் பொருத்தமான உதாரணங்களை முன்வைத்து விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** உடல்சார் குறைபாடு மற்றும் உடல்நலக் (ஆரோக்கிய) குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு உதவுவதற்காக ஆசிரியர்கள் உள்ளடங்கற் கற்றல் சூழலை எவ்வாறு உருவாக்க முடியும் என்பதை ஆராய்க. உங்கள் பதிலில் உத்திகள் மற்றும் நடைமுறை எடுத்துக்காட்டுக்களைச் சேர்க்கவும்.

**(12 புள்ளிகள்)**

**14. i.** குறிப்பான கற்றல் இயலாமையின் பண்பியல்புகள் **மூன்றினை (03)** விளக்குக.

**(03 புள்ளிகள்)**

**ii.** வகுப்பறை அமைப்பில் குறிப்பான கற்றல் இயலாமைகள் உள்ள மாணவர்கள் எதிர்கொள்ளும் **மூன்று** (03) பொதுவான சவால்களை அடையாளம் கண்டு இந்தச் சவால்கள் அவர்களின் கல்வி முன்னேற்றத்தை எவ்வாறு பாதிக்கலாம் என்பதற்கான எடுத்துக்காட்டுக்களை முன்வைக்குக.

**(05 புள்ளிகள்)**

**iii.** உள்ளடங்கல் வகுப்பறைகளில் குறிப்பான கற்றல் இயலாமைகள் உள்ள மாணவர்களுக்கு உதவியளிக்க ஆசிரியர்கள் பயன்படுத்தக்கூடிய உத்திகளைப் பரிந்துரைத்து இந்த உத்திகளின் செயற்றிறனை நிரூபிக்க நடைமுறை உதாரணங்களை முன்வைக்குக.

**(12 புள்ளிகள்)**

*- முழுப்பதிப்புரிமை பெற்றது -*



39